# மன்னார் அனல் மின் நிலையத்தினை விற்பதற்கே புதிய மின்சாரச்சட்டத்தினால் முன்னுரிமை அளிப்பு!

## ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் விற்க முயற்சிப்பதாக முன்னாள் எம்.பி. அஜித் பி.பெரேரா குற்றச்சாட்டு!

புதிய மின்சார சட்டமூலத்தின் மூலம் 100 மெகாவாட் திறன் கொண்ட மன்னார் அனல் மின் நிலையத்தை விற்பதற்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அஜித் பி. பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் – “புதிய மின்சார சட்ட மூலத்தை உருவாக்க ஏப்ரலில் அமைச்சரவை அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. எனினும், இவ்வாறு அனுமதி அனுமதிக்கப்பட்டமை பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

2➤



மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 10 செவ்வாய்க்கிழமை 23.04.2024 கதிர் 238

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel

## தியத்தலாவை விபத்து தொடர்பில் விசாரிக்க எழுவர் அடங்கிய விசாரணைக்குழு நியமனம்



தியத்தலாவையில் கார் பந்தயப் போட்டியின்போது இடம்பெற்ற விபத்து தொடர் பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக இராணுவத்தினரால் 7 பேர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஒருவரின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவித்துள்ளார்.

சம்பவம்இடம்பெற்றமைக்கான காரணம், பொறுப்புக் கூற வேண்டியவர்கள்

2➤

## ஓய்வூதியம் பெறும் இருவர் நுகர்வோர் அதிகார சபையிலும் சம்பளம் பெற்று வந்த விநோதம்!



அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வரும் இரண்டு அதிகாரிகள் நுகர்வோர் அதிகார சபையிலும் சம்பளம் பெற்று வருவதாக 'சத்ஜன பலகாய' அமைப்பின் பொதுச் செயலாளர் அஜித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியம் பெறும் அதே சமயத்தில் மற்றுமொரு நிறுவனத்தில் சம்பளம் பெறுவது சட்டவிரோதமானது எனவும் அது தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை எனவும் ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவித்துள்ள அவர், நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் உரிய முறையில் செயற்படாத காரணத்தினால், புத்தாண்டுக் காலத்தில் மோசடி வியாபாரிகள் பொதுமக்களைச் சுரண்டி லாபமீட்டினர் எனவும்,

2➤

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி தேர்தலின் பின்னர் அநுர வசம்

### கிரியெல்ல எம்.பி. கூறுகின்றார்

“எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியே பெறும்.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினரும் எதிரணி பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“கிராமிய மட்டத்தில் சஜித்துக்கு ஆதரவு அலை வீசுகின்றது. தம்மை அவர் பார்த்துக்கொள்வார் என மக்கள் உறுதியாக நம்புகின்றனர். எனவே, உள்நாட்டில் சஜித்தின் வெற்றி உறுதியாகியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி எமக்குச் சவாலாக அமையாது. ஆனாலும், மொட்டுக் கட்சியினரை விட கூடுதல் வாக்குகளைப் பெறுவார்கள். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குரிய வாக்கு

2➤

## 8 புதிய பிரமிட் திட்டங்கள் குறித்து இலங்கை மத்திய வங்கி எச்சரிக்கை!



இலங்கை மத்திய வங்கியினால், புதிதாக 8 நிறுவனங்கள் சட்ட விரோதமான பிரமிட் திட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்ற முறைபாடுகளுக்கு அமைய குறித்த 8 நிறுவனங்களும் பிரமிட் திட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி,

1. Beecoin App/ Sunbird Foundation
2. Fast Win (Pvt) Ltd
3. Fruugo Online App/ Fruugo Online (Pvt) Ltd
4. Genesis Business School/ Era Miracle (Pvt) Ltd
5. Isimaga International (Pvt) Ltd
6. Ledger Block
7. Qnet/Questnet 8. Ride to Three Freedom (Pvt) Ltd

2➤

## மலையக மக்கள் முன்னணியின் மாநாடு 28ஆம் திகதி ஹட்டனில்

மலையக மக்கள் முன்னணியின் 35ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பேராளர் மாநாடும் எதிர்வரும் 28ஆம் திகதி ஹட்டன் டிகேடபிள்யூ கலாசார மண்டபத்தில் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது. நுவரெலியாவில்நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன் எம்.பி. இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இம்மாநாடானது மலையக மக்கள் முன்னணியின் 35ஆவது ஆண்டைக் கொண்டாடும் ஒரு எழுச்சி மாநாடாகக் காணப்படும். மலையக மக்களின் வாழ்க்கைப் பயணத்துக்குக் கட்சி என்ற அடிப்படையிலும் தொழிற்சங்கம் என்ற அடிப்படையிலும் சேவையாற்றி வரும் மலையக மக்கள் முன்னணி 35 வருடத்தில் கால் பதித்துள்ளமை வரலாற்று மிக்க நிகழ்வாகும்.

அந்நிகழ்வை மிக பிரம்மாண்டமான முறையில் மாற்றத்தை நோக்கிய மலையகம் என்ற தொனிப்பொருளில் நடத்தவுள்ளோம்.

இந்த மாநாட்டில் கடந்த காலங்களில் மலையக மக்கள் முன்னணியின் எழுச்சி, வளர்ச்சிக்காகப் பாடுபட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். ஊடகத்துறை சார்ந்தவர்களையும் கௌரவிக்கும் ஒரு நிகழ்வாக இது இடம்பெறும். இந்த மாநாட்டில் முக்கிய நிகழ்வாக மலையக மக்கள் முன்னணிக்கு வித்திட்டு அதை விருட்சமாக வளர வழிவகுத்த மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சந்திரசேகரனுக்குத் தபால் தலை வெளியிடவும் உத்தேசித்துள்ளோம்.” - என்றார். (அ)

## மொட்டு கட்சியின் எம்.பி. விஜயதாச ராஜபக்ஷ சுதந்திர கட்சியில் இணைந்தமை முரணானது

### அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய திட்டம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உறுப்பினராகி நாடாளுமன்றத்திற்கு தெரிவான அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ வேறொரு கட்சியின் பதில் தலைவர் பதவியை பெற்றுள்ளதால் அவரது நாடாளுமன்ற உறுப்பினர்



பதவி குறித்து எடுக்க வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசிக்கப்படும் என பொதுஜன பெரமுன கட்சியின் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கட்சியின் அரசியலமைப்பு

2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## தியாத்தலாவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் பார்வையிடுவதற்காக வருகை தந்தவர்களுக்கான பாதுகாப்பு உரிய முறையில் வழங்கப்பட்டதா போன்ற விடயங்கள் தொடர்பில் இந்தக் குழு ஆராயவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, தியத்தலாவையில் இடம்பெற்ற விபத்து தொடர்பான அறிக்கை எதிர்வரும் 10ஆம் திகதி இராணுவத் தளபதியிடம் கையளிக்கப்படும் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி தியத்தலாவையில் கார் பந்தயத்தில் இடம்பெற்ற கார் விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரு சாரதிகளும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ)

## மன்னார்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதாவது, ஏப்ரல் 8 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு புதிய மின்சார சட்ட மூலம் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி, நாட்டில் அமைச்சரவை அமைச்சர்கள் இல்லாத நிலையிலும், புதிய மின்சார சட்ட மூலம் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படாத நிலையிலுமே இந்த புதிய மின்சார சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டதாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் தெரிவித்துள்ளார், என அமைச்சர் குறிப்பிட்டார்.

புதிய மின்சார சட்டமூலமானது மின்சார சபையை கலைத்து விடுவதாக உள்ளது. மின்சார சபை என்பது இலங்கையில் பல வருடங்களாக ஒவ்வொரு வீட்டிற்கும் மின்சாரத்தை வழங்கி வரும் ஒரு அமைப்பாகும். பலரின் அர்ப்பணிப்பால் கட்டியெழுப்பப்பட்ட ஒரு நிறுவனமே இந்த மின்சார சபை ஆகும்.

அரசாங்கம் முன்வைத்துள்ள மாதிரி படிவத்தின்படி மின்சார சபை 12 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அதனூடாக மின்சார சபையை கூறுகளாக பிரித்து அவற்றை நிறுவனங்களாக்கி விற்பனை செய்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மின் உற்பத்தி நிலையங்களை நிர்வகிப்பது மின்சார சபைக்கு கடினமானதல்ல. இந்த மின் உற்பத்தி நிலையங்கள் அனைத்தும் அரசுக்குச் சொந்தமான மின் உற்பத்தி நிலையங்கள், அவை முறையாக நிர்வகிக்கப்படுகின்ற நிலையிலேயே இந்த புதிய சட்டமூலம் அரசுக்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையங்களை தனியாருக்கு விற்பதற்கான வழியை ஏற்படுத்தியுள்ளது.

அவ்வாறு செய்தால் அவற்றை வாங்கும் தனியார் நிறுவனங்களிடம் அதிக விலை கொடுத்தே மின்சார அலகை பெற வேண்டியேற்படும். அதற்கமைய, டீசல் மின் உற்பத்தி நிலையங்கள், நிலக்கரி மின் நிலையங்கள், காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றை வாங்கும் தனியார் நிறுவனங்களுக்கு லாபம் ஈட்டுவதற்கான ஆதாரம் இந்த சட்டத்தில் எழுத்துப்பூர்வமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தை அவசர அவசரமாக தயாரித்து, சில மின் உற்பத்தி நிலையங்களை ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் விற்பனை செய்வதற்கு அரசாங்கத்திலுள்ள சிலர் தயாராகி வருகின்றனர். ஏலமின்றி இந்த மின் உற்பத்தி நிலையங்களை வாங்குவதற்கு சில வர்த்தகர்களும் தயாராகவே உள்ளனர். எனவே, இந்த சட்டமூலத்தை அரசாங்கம் நிறைவேற்றினால் நாட்டின் மின்சார கட்டமைப்பை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு முழுமையாக விற்று விடுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதாக அது அமையும். ஆக, மின்சார சபையின் பெறுமதியான வளங்களை விற்பதற்கு சட்டபூர்வ அனுமதியை வழங்குவதற்காகவே இந்த புதிய சட்ட மூலம் கொண்டு வரப்படுகின்றது" என்றார். (ரெசி-97)

## ஓய்வூதியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவ்வாறே வெசாக் காலத்திலும் அவர்கள் பாவனையாளர்களை சுரண்டுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கண்டி, அநுராதபுரம், பொலன்னறுவை, தம்புள்ளை மற்றும் மஹியங்கனை பிரதேசங்கலைச் சேர்ந்த பொதுமக்கள் அதிகமாக சுரண்டலுக்கு ஆளாகக்கூடும் என்பதால், அதிகாரிகள் இது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார். (ரெசி-99)

## எதிர்க்கட்சித்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வங்கியில் ஒரு பகுதி எமக்கும் வரும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை தேசிய மக்கள் சக்தியே பெறும் என நம்புகின்றேன்." - என்றார்.

## 8 புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகிய மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் சட்டவிரோதமான பிரமிட் திட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சட்டவிரோத விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவது தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# 800 மில்லிகிராம் போதைப் பொருளுடன் பொலிஸ் உத்தியோகத்தர் கைதானார்!

கட்டானையிலிருந்து கொழும்புக்கு ஐஸ் போதைப்பொருளை கொள்வனவு செய்ய வந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் 800 மில்லிகிராம் போதைப்பொருளுடன் பொலிஸ் குற்றப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். கட்டானைப் பொலிஸில் பணிபுரியும் குறித்த பொலிஸ் உத்தியோகஸ்தர், தனது பிரதேசத்தில் போதைப்பொருள் கிடைக்காத காரணத்தாலேயே ஐஸ் போதைப்பொருளை வாங்குவதற்காக கொழும்பு வந்ததாக பொலிசாரிடம் தெரிவித்துள்ளார். பொலிஸ் விசாரணையின் போது அவருக்கு போதைப்பொருள் விற்பனை செய்தவர் தொடர்பான விபரம் தெரியவந்துள்ளதுடன், தான் நீண்டகாலமாக போதைப்பொருளுக்கு அடிமையாகியிருப்பதாக விசாரணைகளின் போது மேற்படி பொலிஸ் உத்தியோகஸ்தர் தெரிவிதுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெசி-98)

## மொட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் சட்டத்தின் பிரகாரம், அரசியல் கட்சியொன்றில் ஒருவர் அங்கத்துவம் பெற்ற பின்னர், அவர் வேறு கட்சியில் அங்கம் வகிப்பது அரசியலமைப்பிற்கு முரணானது என பொதுஜன பெரமுன கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெசி-100)

# புத்தளம் கல்லடியில் விபத்து மூன்று பேர் காயம்

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் - குருணாகல் பிரதான வீதியின் கல்லடி பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை (22) இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பேர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளத்திலிருந்து ஆனமடுவ பகுதிக்குச் சென்ற லொறியுடன் ஆனமடுவ பகுதியிலிருந்து புத்தளம் நோக்கிச் சென்ற வான் மோதி விபத்துக்குள்ளாகியுள்ள நிலையில் வானிற்குப் பின்னால் சென்ற மோட்டார் சைக்கிள் லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின் போது வானில் பயணித்த சாரதி உட்பட மூவரில் இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் .

ஒருவர் சிறு காயங்களுக்குள்ளாகிய நிலையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாகவும், லொறியின் சாரதியும் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

# பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் இருவர் பலி – ஒருவர் தப்பியோட்டம்

*ஹெரணை பாதுக்க - மொரகஹாஹேன பகுதியில் பொலிஸ் கட்டளையை மீறி பயணித்த ஓட்டோ மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.*

*இன்று அதிகாலை 1.50 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*குறித்த ஓட்டோவை நிறுத்துவதற்குப்பொலிஸார் சமிக்ஞை செய்துள்ளனர். எனினும், ஓட்டோவில் இருந்தவர்கள் பொலிஸாரை நோக்கித் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் செல்ல முற்பட்டுள்ளனர்.*

*இது தொடர்பில் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த ஓட்டோவைப் பின்தொடர்ந்து சென்று நிறுத்துவதற்குப் பொலிஸாரால் முயற்சி எடுக்கப்பட்டாலும், ஓட்டோவில் இருந்தவர்கள் துப்பாக்கிச்சூடு நடத்த முற்பட்டுள்ளதால் பொலிஸார் பதில் தாக்குதல் தொடுத்துள்ளனர்.*

*இதில் இருவர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் தப்பியோடியுள்ளார்.*

*(அ)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கர்ப்பிணித்தாய் படகில் குழந்தையைப் பிரசவித்த சம்பவம் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிக்கை

## பயணிகளே பிரசவம் பார்த்ததென்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாம்!



நயினாதீவு வைத்தியசாலையிலிருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட கர்ப்பிணித்தாய் படகில் பிரசவித்த சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை தெளிவுபடுத்தியுள்ளது.

யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், அண்மையில் மேற்படி விடயம் சமபந்தமாக பல ஊடகங்களிலும் இணையத்தளங்களிலும் உண்மைக்கு புறம்பான செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இவ்விடயம் தொடர்பான உண்மை நிலையை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்

குறித்த கர்ப்பிணித் தாய் நயினாதீவு பிரதேச வைத்தியசாலையில் இருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டபோது கடமையிலிருந்த வைத்திய அதிகாரியும் குடும்பநல உத்தியோகத்தரும் கர்ப்பிணித் தாயுடன் படகில் கூடவே சென்றுள்ளனர். இவருக்கு படகில் பிரசவம் சம்பவித்தபோது அவர்கள் இருவருமே பிரசவத்தை கையாண்டனர்.

தற்போது நயினாதீவு வைத்தியசாலையின் அன்புலன்ஸ் படகு பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனை திருத்தி பழைய நிலைக்கு கொண்டுவர முடியாதென தொழிநுட்ப ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, புதிய அன்புலன்ஸ் படகினை பெற்றுக்கொள்ளும்வரை தற்காலிக ஏற்பாடாக பயணிகள் சேவையில் ஈடுபடும் படகுகளை வாடகைக்கு அமர்த்தியே நோயாளர்களை இடமாற்றம் செய்கின்றோம். அவ்விதம் நோயாளர்களை இடமாற்றம் செய்யும்போது நோயாளர்களும் மருத்துவ பணியாளர்களும் மட்டுமே அப்படகில் பயணம் செய்வார்கள். அப்போது வேறு பயணிகள் யாரும் அப்படகில் பயணம் செய்வதில்லை

மேற்படி செய்தியில் குறிப்பிட்ட கர்ப்பவதி சாதாரண படகில் அனுப்பப்பட்டதாகவும் படகில் இருந்த பயணிகளே பிரசவம் பார்த்ததாகவும் குறிப்பிடப்பட்டது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்பதை தெளிவுபடுத்த விரும்புகின்றேன் - என்றுள்ளது. (01)

# அரச கரும மொழியை மேம்படுத்தும் நோக்கிலான ஓரங்க தொலைக்காட்சி நாடக போட்டி அறிவிப்பு

## தமிழ், சிங்கள மொழிகளில் கலந்து கொள்ளலாம்

அரச கரும மொழியை மேம்படுத்தும் வகையில் ஓரங்க தொலைக்காட்சி (டெலி) நாடக போட்டியொன்றை நடத்துவதற்கு பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தேசிய மொழிப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

மொழி, கலாச்சாரம் மற்றும் சிறந்த புரிந்துணர்வு, மொழி பயன்பாட்டின் சாத்தியம் மற்றும் நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு இடையேயான உறவை மதிப்பிடும் ஒரு சமூக பின்னணியை இதன் மூலம் உருவாக்க முடியும் என நம்பப்படுகின்றது. இந்த டெலி நாடக போட்டியானது ஒரு பகிரங்க போட்டியாக நடத்தப்படுகின்றது.

போட்டியாளர்கள் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் தமது படைப்புகளை சமர்ப்பிக்க முடியும். நாடக நேரம் 20 நிமிடங்களுக்கு மிகாமலும் 15 நிமிடங்களுக்கு குறையாமலும் இருப்பதுடன் அவை சுயாதீனமான படைப்பாக இருத்தல் வேண்டும்.

போட்டியில் சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஓரங்க டெலி நாடகங்களும் நாடகத்துறை நிபுணர் குழுவினால் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களுக்கு தெரிவு செய்யப்படுவதுடன், அமைச்சினூடாக பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

போட்டிக்குரிய ஓரங்க டெலி நாடகத்தை அதன் பிரதி சகிதம் 'பென் டிரைவ்' ஒன்றில் செலுத்தி 2024 மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேலதிக செயலாளர் (தேசிய மொழிகள்), அரச கருமங்கள், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, தேசிய மொழிப் பிரிவு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(ரெசி-96)




# 13 வயது சிறுமி பாலியல் உறவின்றி கர்ப்பமடைந்த அதிர்ச்சி சம்பவம்

*13 வயது சிறுமி பாலியல் உறவு கொள்ளாமலேயே கர்ப்பமடைந்த சம்பவம் தொடர்பில் வைத்தியர்கள் மற்றும ஹெட்டிபொல பொலிஸார் விசேட விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.*

*பல நாட்களாக வயிற்று வலியால் பாதிக்கப்பட்ட சிறுமி குளியாபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பபட்டிருந்ததாக குருநாகல் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஷ் குமாரசிங்ஹ தெரிவித்துள்ளார்.*

*மருத்துவர்கள் நடத்திய பரிசோதனையில் அவர் இரண்டு மாத கர்ப்பிணியாக இருப்பது தெரியவந்தது. இச்சம்பவம் குறித்து சிறுமியிடம் விசாரணை நடத்தப்பட்ட போதிலும், அது குறித்து எந்த தகவலும் தெரிவிக்கவில்லை.*

*சிறுமி நிரபராதி என அவரது பெற்றோர் பொலிஸாரிடம் பலமுறை கூறியுள்ளனர். சிறுமி குளியாப்பிட்டிய சட்ட மருத்துவரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில், சிறுமியிடம் பாலுறவு கொண்டதற்கான அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை என தெரியவந்துள்ளதாக கூறப்படுகின்றது.*

*(ரெசி-90)*

# யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தில் தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரை

## தமிழக பேராசிரியர் முனைவர் கு.சின்னப்பன் ஆற்றினார்

யாழ் தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தனிநாயகம் அடிகளார் நான்காவது நினைவுப்பேருரை, அருட்தந்தை கலாநிதி அமிர்த யெயசேகரம் அடிகள் தலைமையில் நேற்று மாலை யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற மண்டபத்தில் இடம்பெற்றது

இதில் தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் முனைவர் கு.சின்னப்பன், தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாரின் கல்விப் பணிகள் என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றினார்.

நிகழ்வை யாழ் பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நெறிப்படுத்தினார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தொடக்கவுரையையும் நெடுந்தீவு பிரதேச கலாசார உத்தியோகத்தர் அ. சிவஞானசீலன் ஆய்வுரையாளரை அறிமுகமும் செய்தனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி ஆய்வுரை ஆற்றிய பேராசிரியர் கு.சின்னப்பனுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார். மண்கும்பான் வெண்புரவிக் கலைஞர்களின் கும்மி நடனமும் அங்கு இடம்பெற்றது.

நிகழ்வில் அருட்தந்தையர்கள் கல்வி ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# கிண்ணியா பிரதேசத்தில் அரிசி வழங்கும் திட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்)

அரசாங்கத்தின் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான அரிசி வழங்கும் திட்டம் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் இன்று (23) இடம்பெற்றது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். ஹனி தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா கலந்து கொண்டு அரிசி பொதிகளை வழங்கி வைத்தார்.

10 கிலோ கிராம் எடை கொண்ட அரிசி பொதிகள் 220 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை, “சஜித் - அனுர குமார விவாதம்“ தொடர்பில் கிண்ணியாவில் இன்று (23) இடம்பெற்ற நிகழ்வின் பின் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா, விவாதத்தை யாரும் நடத்தலாம். அரசியலுக்காக விரும்பினால் அதைச் செய்யலாம். ஜனாதிபதியாக தற்போது ரணில் விக்ரமசிங்க உள்ளார். அவரே பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்களை மீட்டுள்ளார், என்று குறிப்பிட்டார்.

# தேசிய மாணவச் சிப்பாய்ப் படையணியில் கல்முனை கல்வி வலய மாணவர்கள் வெற்றி

(நூருல் ஹுதா உமர்)

தேசிய மாணவச் சிப்பாய்ப் படையணியின் மட்டக்களப்பு 38வது படைப்பிரிவில் கல்முனை வலயத்திற்குட்பட்ட நிந்தவூர் கமு-கமு-அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை, கல்முனை கமு-கமு-ஸாஹிறா தேசிய பாடசாலை மற்றும் மருதமுனை கமு-கமு-ஷம்ஸ் மத்திய கல்லூரி ஆகிய மூன்று பாடசாலைகள் தேசிய மட்ட முகாமில் கலந்து கொண்டு வெற்றியீட்டியுள்ளன.



இதனை கௌரவிக்கும் விதமாக 38வது படைப்பிரிவினுடைய கட்டளையிடும் அதிகாரி லெப்டினனட் கேணல் ஜீ.டவலியு.ஜீ.எச். நிலந்தவின் சார்பாக தேசிய இளைஞர் படையணியின் குச்சவெளி பயிற்சி நிலையத்துக்கு பொறுப்பான பொறுப்பு அதிகாரி மேஜர் எம்.எஸ். எம். மிப்றாஸ்கானினால் கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ் ச/ஹதுல் நஜீமுக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்) எம்.எச். ஜாபீர், உதவிக்கல்வி பணிப்பாளர்களான யூ.எல். றியால், எம்.எல்.எம். முதர்ரிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நிலைபேறான வீட்டுத்தோட்டவேலைத் திட்டம் செட்டிக்குளம் பிரதேசத்தில் முன்னெடுப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

விவசாய அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற நிலைபேறான வீட்டுத் தோட்ட வேலைத் திட்டத்தின் மூலம் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடுதலுக்கான ஆரம்ப நிகழ்வானது கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் பங்கேற்போடு செட்டிகுளம் கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெற்றது.



இதன்போது பயனாளிகளுக்கான வீட்டுத் தோட்ட விதைகள் மற்றும் மரக்கன்றுகளை இராஜாங்க அமைச்சர் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



# 21ஆவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் துபாயில் நடைபெறவுள்ள போட்டிகளில் இலங்கை அணி

21ஆவது ஆசிய கனிஷ்ட (20 வயதுக்குட்பட்ட) மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்பதற்காக இலங்கை இளையோர் மெய்வல்லுனர் அணி நேற்று (22) ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு புறப்பட்டுச் செல்கிறது.

ஆசிய மெய்வல்லுனர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்தப் போட்டித் தொடரானது நாளை 24ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை துபாயில் நடைபெறவுள்ளது.

இதற்கான இலங்கை அணியில் 17 வீர, வீராங்கனைகள் இடம்பிடித்துள்ளனர்.

11 பேர் கொண்ட ஆண்கள் அணிக்கு கொழும்பு ஆனந்த கல்லூரியின் மெரோன் விஜேசிங்க தலைவராகவுள்ளார். பிபில நன்னபுரவ மகா வித்தியாலயத்தின் மதுஷானி ஹேரத் தலைமையிலான மகளிர் அணியில் 6 வீராங்கனைகள் உள்ளனர்.

இறுதியாக கடந்த ஆண்டு ஜூன் மாதம் தென் கொரியாவில் நடைபெற்ற ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை 2 தங்கம், ஒரு வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களை வென்று 7ஆவது இடத்தைப் பிடித்தது.

இலங்கை நட்சத்திர மெய்வல்லுனர் வீராங்கனை தருஷி கருணாரத்ன தலா ஒரு தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றதுடன், 400 மீற்றர் கலப்பு அஞ்லோட்ட அணி புதிய போட்டிச் சாதனையுடன் தங்கப் பதக்கத்தை வென்றது.

இதில் ஜயெஷி உத்தரா மற்றும் மலித் யசிரு ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களை வென்றனர்.

40 இற்கும் மேற்பட்ட பங்குபற்றவுள்ள இந்த ஆண்டு ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை அணி ஐந்திற்கும் மேற்பட்ட பதக்கங்களை வெல்லும் என இலங்கை மெய்வல்லுனர் சங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# திருகோணமலை அறிவு ஒளி மையத்தின் மாணவர் மன்ற உறுப்பினர் பதவியேற்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

*திருகோணமலை பத்தாம் குறிச்சி அறிவு ஒளி மையத்தின் மாணவர் மன்ற உறுப்பினர் பதவி ஏற்பு நிகழ்வு நேற்று (22) விவேகானந்தா மீனவர் சங்கக் கட்டிடத்தில் நடைபெற்றது.*

*இதில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தின் தலைவர் ச.குகதாசன், மாணவர் மன்ற உறுப்பினர்கள், ஆசிரியர், மீனவர் சங்க உறுப்பினர்கள், மகளிர் சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.*





# அன்னையர் ஆதரவுக் குழுக்களுக்களை வலுப்படுத்தும் நோக்கில் கருத்தரங்கு

(எம்.ஏ.றமீஸ்)

சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் நிறுவப்பட்டுள்ள அன்னையர் ஆதரவுக் குழுக்களை வலுப்படுத்தி ஆரோக்கியமான சமூகன்றினை கட்டியெழுப்பும் நோக்கில் சுகாதார அமைச்சின் சுகாதாரக் கல்விப் பணியகத்தினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த வேலைத்திட்டத்திற்கமைவாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய சுகாதார கல்வி பிரிவினால் கல்முனை பிராந்தியத்தில் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் நிறுவப்பட்டுள்ள அன்னையர் ஆதரவுக் குழுக்களுக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள அன்னையர் ஆதரவுக் குழுக்களுக்களை வலுப்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி கருத்தரங்கு சனிக்கிழமை (20) பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எப்.எம்.உவைஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.றிஸ்பின், மாவட்ட சுகாதார கல்வி அதிகாரி எம்.ஜே.எம்.பைறூஸ், பல் வைத்திய நிபுணர் ஏ.ஆர்.கத்தாபி, மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ். எம்.அப்துல் மலிக் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு விரிவுரையாற்றினர்.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள அன்னையர் ஆதரவுக் குழுக்களைச் சேர்ந்த சுமார் 70 உறுப்பினர்கள் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டனர். குறித்த வேலைத்திட்டத்தினை முன்னெடுப்பதற்கு யுனிசெப் நிறுவனம் நிதியுதவி வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காத்தான்குடியில் நோன்புப் பெருநாள் சித்திரைப் புத்தாண்டு விழா

(அஸ்ஹர் இப்றாஹிம்)



காத்தான்குடி சமுர்த்தி வங்கியின் ஏற்பாட்டில் நோன்புப் பெருநாள் மற்றும் சித்திரைப் புத்தாண்டு விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை ஹிழுறிய்யா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ.உதயஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் காத்தான்குடி சமுர்த்தி வங்கி முகாமையாளர் எம்.ஏ.எம்.சுல்மி, உதவி பிரதேச செயலாளர் எம்.எஸ்.சில்மியா, கணக்காளர் கே.சித்ரா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.தனுஜா, நிருவாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.ற ஊப், கிராம நிருவாக உத்தியோகத்தர் எம்.எம்.ஜறூப், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் பத்மா ஜெயராஜ், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் ஆ. வாமதேவன், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எஸ்.கண்ணன். புதிய காத்தான்குடி சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ். எச்.எம்.முஸம்மில், தேசிய நீர் வழங்கள் அதிகாரசபையின் காத்தான்குடி பிரிவு பொறியியலாளர் எம்.ஸமட், இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஏ.டபில்யுள் இர்ஷாத் அலி, மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுக்களான யானைக்கு கண் வைத்தல், முட்டி உடைத்தல், தீப்பந்தம் வீசுதல், தேங்காய் துருவுதல், சாக்கோட்டம், தொப்பி மாற்றுதல் தேசிக்காய் ஓட்டம், பணிஸ் சாப்பிடுதல், சங்கிலிக் கதிரை ஓட்டம், பலூன் உடைத்தல், மெதுவாக சைக்கிள் ஓட்டுதல் போன்ற விளையாட்டுகள் இடம்பெற்றதுடன் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

# மீனாட்சி அம்மன் பாற்குட பவனி



(காரைதீவுச் செய்தியாளர்)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் இரண்டாவது வருடாந்த அலங்கார உற்சவத்தின் பாற்குட பவனி அண்மையில் (19) சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்துக்கு மேற்கு புறமாக உள்ள சிவன் ஆலயத்தில் விசேட கிரியைகள் பூசைகள் என்பன இடம்பெற்று பாற்குடபவனி ஆரம்பமானது.

முன்னே ஆலய பரிபாலன சபை தலைவர் கி.ஜெயசிறில் பிரதான கும்பம் தாங்க, ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா பிரதான மடை தாங்க, ஆலய குரு சிவஸ்ரீ ச. கோவர்த்தனசர்மா வழிகாட்டலில் பாற்குடபவனி சிறப்பாக நடைபெற்றது.

இதேவேளை உற்சவகால பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் ஆலய குரு சிவஸ்ரீ ச.கோவர்த்தன சர்மா சமுகத்தில் வருஷாபிஷேக கிரியைகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு தொடர்ச்சியாக ஒன்பது தினங்கள் பகல் அலங்கார உற்சவ திருவிழாக்கள் இடம்பெற்று நாளை 23 செவ்வாய்க்கிழமை சித்ராப் பௌர்ணமி அன்று தீர்த்த உற்சவத்துடன் விழா நிறைவடைய இருக்கின்றது .

இந்த பத்து நாள் அலங்கார உற்சவ திருவிழாக்காலங்களில் காலை 10 மணிக்கு கும்ப பூசையுடன் ஆரம்பமாகி பகல் ஒரு மணிக்கு அலங்கார உற்சவ பிரதான பூசை, அம்பாளின் வீதியுலா இடம் பெறும். அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு தினமும் அன்னதானம் வழங்கப்படுகிறது .

பத்து தினங்களுக்கான உற்சவகால திருவிழாக்களையும் அன்னதானத்தையும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பிரதேசங்கள் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# சிறுவர்களைப் பாதுகாப்பது நம் எல்லோரதும் கடமையாகும்!

## மட்டு இளைஞர் வலுவூட்டல் அமைப்பின் பணிப்பாளர் எஸ்.எம்.அறூஸ்

(சர்ஜூன் லாபீர்)

"இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்கள்" என்பதை அனேகமானவர்கள் அறிந்திருந்தாலும் சிலர் சிறுவர்கள் விடயத்தில் கவனம் செலுத்துவதில்லை.

சின்னஞ்சிறார்களின் எதிர்காலத்தை சூனியமாக்கும் போதைப்பொருள் பாவனையிலிருந்து அவர்களை தடுப்பதற்கும் தங்களுடைய பிள்ளைகளை தீய உறவுகளிடம் ஒப்படைத்துவிட்டு வெளிநாடு செல்வதை தடைசெய்வதற்கும் கல்வி கற்கவேண்டிய வயதில் தொழிலுக்கு அமர்த்தப்படுவதை தடுப்பதற்கும்

அதனை மீறினால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் இன, மத பேதம் கடந்து அனைவரும் உயரிய சமூக சிந்தனையோடு செயற்படுவதற்கும் முன்வரவேண்டும்.

அதேபோன்று, தற்போதைய கால சூழ்நிலையை பொறுத்தவரை சிறுவர்களுக்கு வழிகாட்டுவதில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அயலவர்களும் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் வலுவூட்டல்,



சமூக நலத்திட்டங்கள் மற்றும் மனித உரிமைகளுக்கான சமாதான தூதுவர்கள் அமைப்பின் பணிப்பாளர் எஸ்.எம்.அறூஸ் தெரிவித்தார்.

சிறுவர்களின் உரிமை மேம்பாடு சம்மந்தமான பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், இன்றைய காலத்தில் குறிப்பாக வறுமைக்குட்பட்ட சிறுவர்களில் அதிகமானோர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாக்கியுள்ளார்கள். எனவே, அச்சிறுவர்களின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு அவர்களை நற் பிரஜைகளாக மாற்ற நாம் முயற்சி எடுக்க வேண்டும், எனவும் அவர் தெரிவித்தார்.

இன்றைய உலகில் பிறப்பில் ஏழ்மையில் வாழ்ந்தவர்களில் அதிகமானோர்தான் பணக்காரர்களாக உருவாகியுள்ளார்கள். ஏனெனில், அவர்களுக்கு ஏழ்மையின் தன்மை புரியும். அதனால்தான் அவர்கள் முன்னேறிச் செல்கின்றார்கள். அது போல் நீங்களும் எதிர்காலத்தில் முன்னேற வேண்டும் என்பதோடு ஏனையவர்களுக்கு இடம் கொடுத்து முன்னேற்றமடையவேண்டும், என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

# காஸா – இஸ்ரேல் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு கல்முனை கல்வி வலயத்தினால் உதவிக் காசோலை வழங்கி வைப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ், நூறுல் ஹுதா உமர், பாறுக் ஷிஹான்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கல்வி சாரா ஊழியர்களின் பங்களிப்போடும் வலயக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றும் கல்வி அதிகாரிகள், கல்விசாரா ஊழியர்கள் தினைகள உத்தியோகத்தர்கள் ஆகியோரின் நிதி பங்களிப்போடும் சேகரிக்கப்பட்ட சுமார் 31,28,500.00 ரூபா நிதி பாடசாலைகளின் அதிபர்களினால் நேற்று (22) வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீமிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனை வழிகாட்டலுக்கு அமைய ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி சாரா ஊழியர்கள் போன்றவர்களின் சொந்த நிதியில் இருந்து சேகரிக்கப்பட்ட இந்த நிதியானது, இஸ்ரேல் – காஸா யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அங்கவீமுற்றுள்ள பாடசாலை செல்லும் சிறுவர்களின் கல்வி அபிவிருத்தி மற்றும் அவர்களது இதர செலவுகளுக்கு பயன்படுத்துவதற்காக ஜனாதிபதி ஊடாக அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

"குறிப்பாக இந்த நிதி சேகரிப்பின் போது கல்முனை கல்வி வலயத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகள் பங்களிப்பு வழங்கியிருக்கின்றமை பாராட்டத்தக்க ஒரு விடயமாகும். இது கல்முனை கல்வி வலயத்தின் இன ஒற்றுமைக்கு கட்டியம் கூறும் ஒரு செய்தியாகும்!" என்று இங்கு உரையாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிர் உட்பட கல்வி அதிகாரிகள், பாடசாலைகளின் அதிபர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.








## காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு கள பரிசோதனை



(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு மேற்பார்வை மற்றும் சிரமதான பணிகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்லிமா வசீரின் ஆலோசனையின் பேரில் இந்த களப்பணிகள் இடம்பெற்று வருகின்றன. காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் தொடர்ந்தும் டெங்கு மேற்பார்வை செய்யப்படவுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் வழங்குகையில், டெங்கு மரணம் ஒன்று இடம்பெறுவதாக இருந்தால் அதற்கு சுகாதாரத் தரப்பும் பொதுமக்களும் பொறுப்பு கூற வேண்டும். இந்த இரு தரப்பினரதும் ஒத்துழைப்பு இல்லாதபோதே டெங்கு மரணம் நிகழ்கிறது. எனவே எமது காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வீடு வீடாக சென்று டெங்கு தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

டெங்கு நோய் பரவுவதற்கான சூழல்கள் அடையாளங்கள் காணும் இடத்து உரிய நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவார்கள் என்றும் பொது இடங்களில் டெங்கு நோய் பரவுவதற்கான சூழலை இல்லாமல் செய்யும் சிரமதான பணிகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. டெங்கு நோயை உருவாக்குவோர் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்கான விசேட திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று சமூகத்தில் உள்ள மத ஸ்தலங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், விளையாட்டுக்கழகங்கள், சமூக சேவை நிறுவனங்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் இவ்வாறான அமைப்புகள் கடந்த காலங்களில் எமக்கு பாரிய அளவிலான ஒத்துழைப்புகளை வழங்கி வருகிறார்கள். அவர்களுடைய ஒத்துழைப்பு எதிர்காலத்திலும் எமக்கு கிடைக்க வேண்டும், என்று தெரிவித்தார். இந்நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கு கள உதவியாளர்கள், என பலர் கலந்து கொண்டனர்.

## பணம் மோசடி

வெளிநாட்டு வேலை வாங்கித் தருவதாகக் கூறி பணத்தை மோசடி செய்த நபர் ஒருவர் படல்கம பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமொன்றை நடத்திக் கொண்டு கனடா மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் தொழில் வழங்குவதாகக் கூறி பண மோசடி செய்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கொடல்ல பிரதேசத்தில் வசிப்பவரான 29 வயதான சண்டலங்க என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

அவர் ஒரு இலட்சம் ரூபா பணத்தை பெற்றுக்கொள்வதற்காக படல்கம நகருக்கு வந்த போது கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது அவரது வீட்டில் சுமார் 50 கடவுச்சீட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து
உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
jride
JRide Driver: Drive & Deliver
JRide - Beyond the Road
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே
புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து
வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்: தொலைபேசி ஊடாகவோ: WhatsApp
மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
Hotline : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!